## ஜூன் - 5

**"கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்."**

**- சங் 31 : 1**

தன்னுடைய விரோதிகளின் முன்னிலையில் தாற்காலிகமாகவும் கூட விசுவாசத்தின் மேலுள்ள நங்கூரத்தின் தன்னுடைய பிடிப்பை விட்டு விடுவதை விட கிறிஸ்தவனுக்கு நேரிடுகிற பெரிய பிரதிகூலம் வேறென்றும்மிராது. ஒரு நொடி நேரம் அவன் அப்படி செய்யும் போது தவிர்க்க முடியாதபடி இருள் அவனை சூழ ஆரம்பித்து விடுகிறது. தன்னுடைய பிதாவினுடைய முகத்தின் பிரகாசத்தைப் பார்க்கக் கூடாதவனாகிறான். ஏனெனில், "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பதுக் கூடாத காரியம்" திரும்பவும் நங்கூரத்தை பிடித்துப் பற்றிக்கொள்ளும்போது அந்தகாரத்தின் சக்திகள் பொதுவாக அவனுடைய மனுஷீகக் குறைகளின் ஆதாரத்தின் பேரில் சந்தேகங்களுடனும், பயங்களுடனும் அவனை பயங்கரமாகத் தாக்குகின்றன. இந்த குறைகள் கிறிஸ்துவினுடைய நீதியின் வஸ்திரத்தினால் மூடப்பட்டிருக்கின்றன என்பதை அவன் எப்பொழுதும் மனதில் வைக்க வேண்டும். நம்முடைய இருதயங்களில் ஆளுகை செய்கிற தேவசமாதானத்தை நாம் உடையவர்களாயிருக்க வேண்டுமானால், நமது நங்கூரத்தை ஒருபொழுதும் விட்டுவிடக் கூடாது, சாத்தானுடைய கொடிய சண்டையினால் நமது தைரியம் குறைய இடங்கொடுக்கவும் கூடாது. நம்முடைய இருதயத்தின் பாஷை எப்பொழுதும், "அவர் என்னைக்கொன்று போட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்" என்றிருக்க வேண்டும்.

**- Z ’95, 157 (R 1835).**

கிறிஸ்தவனின் நம்பிக்கை தன்னிலோ அல்லது மாம்சத்தின் புயபலத்திலுமில்லை; மிகவும் சரியாக, அவனுடைய இருதயம் யேகோவாவில் அமர்ந்திருக்கிறது. தானாக இருக்கிறவரும் (சுயம்பு) நித்தியரும், சாவாமையுள்ளவரும், பிறர் ஆதரவின்றி வாழ்பவரும், மட்டில்லாத ஒருவருமான யேகோவாவின் மார்பில் அனுபவிக்கிற இளைப்பாறுதலை விட எது அதிக பத்திரமானதாக இருக்கக் கூடும்! அப்படிப்பட்ட ஒருவருடைய வாக்குத்தத்தமும் ஆணையும் எல்லா நம்பிக்கைக்கும் பாத்திரமானவைகளாயிருக்கின்றன. நம்முடைய நங்கூரம் அவரில் தனது இளைப்பாறுதலை காண்கிறது. அதாவது, அவருடைய ஆள் தன்மையிலும், குணத்திலும், ஏற்பாட்டிலும், கிரியைகளிலுமே.

**-P ’30, 78.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

1நாளா5:20; 2நாளா14:11; 20:12; யோபு13:15,16; சங்18:30; 22:4,5; 27:1; 31:6,14,15; 34:1-12; 118:5-9; நீதி 3:5; ஏசா26:3; தானி 3:17; மீகா7:7; ஆபகூ3:19; ரோம4; 2தீமோ1:12; எபி 11.

**கோபுர வாசிப்பு** : Z ’16, 341 (R 5990)

**வினாக்கள்** : இந்த வாரத்தில் தேவன் மேல் நம்பிக்கையாயிருந்தேனா? அவற்றில் உதவியாயிருந்ததும் இடையூறாயிருந்ததும் எவை? பலாபலன் என்ன?